பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

25 05 2024 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தேர்தலுக்கான ஆறாம் கட்ட வாக்குப்பதிவு தற்போது அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது.
- ஒடிஷா சட்டப்பேரவைக்கான மூன்றாம் கட்ட வாக்குப்பதிவும் இன்று நடைபெற்று வருகிறது.
- தமிழ் வளர்ச்சிக்காக கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.
- வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று மாலை புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<<>>>>

மக்களவைத் தேர்தலுக்கான ஆறாம் கட்ட வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

ஆறு மாநிலங்கள், இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 58 தொகுதிகளில் காலை ஏழு மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, விறுவிறுப்பாகவும், அமைதியாகவும் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இந்த ஆறாம் கட்டத் தேர்தலில் 11 கோடியே 13 லட்சம் வாக்காளர்கள், தங்களது வாக்குறுரிமையை செலுத்துகின்றனர்.

இதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு லட்சத்து 14 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காலை 11 மணி நிலவரப்படி 25 புள்ளி ஏழு ஆறு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதில், அதிகபட்சமாக மேற்குவங்கத்தில் 36 புள்ளி எட்டு எட்டு சதவீத வாக்குகளும், குறைந்தபட்சமாக ஒடிஷாவில் 21 புள்ளி மூன்று சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

பீகாரில் 24 சதவீதமும், ஹரியானாவில் 22 சதவீதமும், ஜம்மு காஷ்மீரில் 23 சதவீதமும், ஜார்கண்டில் 28 சதவீதமும், தில்லியில் 22 சதவீதமும், உத்தரப்பிரதேசத்தில் 27 சதவீதமும் வாக்குகள் பதிவாகியுள்ளன.

இந்த தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், குறிப்பாக இளையோர் மற்றும் பெண்கள் அதிக எண்ணிக்கையில் வாக்களிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், காலையிலேயே புதுதில்லியில் உள்ள வாக்குச்சாவடியில் தங்களது வாக்கினை செலுத்தினர்.

தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இன்று புதுதில்லியில் வாக்களித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

தம்முடன் 95 வயதான தனது தந்தையும் வாக்களித்ததை சுட்டிக்காட்டினார்.

இதேபோல், வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

வாக்காளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு ராஜீவ்குமார் கூறினார்.

தேர்தல் ஆணையர்கள் திரு **Gyanesh Kumar** திரு **Sukhbir Singh Sandhu** ஆகியோரும் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றினர்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி, அக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, மத்திய அமைச்சர்கள் திரு ஜெய்சங்கர், திரு ஹர்தீப் சிங் பூரி ஆகியோரும் புதுதில்லியில் உள்ள வாக்குச்சாவடியில் தங்களது வாக்கினை செலுத்தினர்.

தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலும் குடும்பத்தினருடன் வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களித்தார்.

இந்த ஆறாம் கட்டத்தேர்தலுடன் ஒடிஷா சட்டப்பேரவைக்கு மூன்றாவது கட்டமாக 42 தொகுதிகளிலும், வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

காலை 11 மணி நிலவரப்படி இந்த தொகுதிகளில் 21 புள்ளி மூன்று இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

ஹரியானாவின் **Karnal** மற்றும் உத்தரப்பிரதேசத்தின் **Gainsari** சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவும் தற்போது நடைபெற்று வருகிறது.

காலை 11 மணிநிலவரப்படி **Karnal**-தொகுதியில் 18 சதவீதமும், **Gainsari** –ல் 26 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

**<<<<<<<<>>>>**

பாதுகாப்புப்படைகள் நவீன தொழில்நுட்பங்களை கூடுதலாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை விமானப்படை தளபதி ஏர்சீப் மார்ஷல் **V R Chaudhari** வலியுறுத்தியுள்ளார்.

கேரளா மாநிலம் **Ezhimala** –வில் உள்ள கடற்படை பயிற்சி மையத்தில் பயிற்சி நிறைவு பெற்ற அதிகாரிகளின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டு அவர் உரையாற்றினார்.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தயாராக படை வீரர்கள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் பயிற்சி நிறைவு செய்த 34 பெண்கள் உட்பட 216 பேருக்கு சான்றிதழ்களை ஏர்ஷீப் மார்ஷல் **V R Chaudhari** வழங்கினார். இந்த பயிற்சியில் நட்பு நாடுகளை சேர்ந்த 10 பாதுகாப்புப்படை வீரர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<<<>>>>**

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளாக தமிழ் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

தமிழ் வளர்ச்சிக்காக பணியாற்றிவரும் தமிழர்களை கௌரவிக்கும் வகையில் மாநில அரசின் சார்பில் ஆண்டுதோறும் 35 விருதுகள் வழங்கப்பட்டு வருவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

22 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்களுக்கு 2 கோடியே 85 லட்சம் ரூபாய் நூலுரிமை தொகையும் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆறு தமிழறிஞர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய் பிரிவு வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், அடுத்த 12 மணிநேரத்திற்குள் புயலாக வலுவடையக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதன்பின்னர், இது வடமேற்காக நகர்ந்து, நாளை காலை தீவிர புயலாக வலுவடைந்து, பங்களாதேஷுன் **Khepupara** - மேற்குவங்கத்தின் சாஹர் தீவுகள் இடையே நாளை நள்ளிரவு கரையை கடக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, மேற்குவங்கத்தின் கடலோர பகுதிகளில் நாளையும், நாளை மறுநாளும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒடிஷாவின் பெரும்பாலான பகுதிகளில் இந்த இரண்டு நாட்களிலும் மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, இந்த புயலினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பது தொடர்பாக, மத்திய அரசு தொடர் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறது.

உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேற்குவங்க அரசுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையிலிருந்து - அந்தமானுக்கு இயக்கப்படும் இரண்டு ஏர் இண்டியா விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதேபோல், கொல்கத்தா மற்றும் விசாகப்பட்டினத்திலிருந்து, அந்தமானுக்கு இயக்கப்படும் விமான சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<<<>>>>**

தமிழகத்தில் கனமழை பெய்தாலும் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தலைமைச்செயலர் திரு சிவ்தாஸ் மீனா கூறியுள்ளார்.

சென்னையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணிகளை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - சிவ்தாஸ் மீனா – 44 செகண்ட்ஸ்)*

**<<<<<<<<>>>>**

யுக்ரைனுடன் பேச்சுக்களை தொடர தயாராக உள்ளதாக ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புடின் அறிவித்துள்ளார்.

பெலாரஸ் அதிபர் திரு **Aleksandr Lukashenko-**வுடன் **Minsk**-ல் பேச்சு நடத்தியபின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

யுக்ரைனுடனான பேச்சுவாரத்தையை தொடர்வதற்கு முன்னர் சில ஒப்பந்தங்கள் எட்டப்பட வேண்டியது அவசிமாகிறது என்று திரு விளாடிமீர் புடின் கூறினார்.

**<<<<<<<<>>>>**

**Papua New Guinea** –வில் நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 300-ஆக அதிகரித்துள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் புதையுண்டதாக அந்நாட்டு பேரிடர் மேலாண்மைத்துறை கூறியுள்ளது.

<<<<<<<<>>>>

பாகிஸ்தானில் வெயிலின் தாக்கத்தினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 50 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளதையடுத்து, வெயில் பாதிப்புக்குள்ளான ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அடுத்த ஐந்து நாட்களுக்கும் வெயிலின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

சில பகுதிகளில் இன்று 51 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் பல்வேறு நகரங்களில் வெயிலுக்கான தற்காலிக நிவாரண முகாம்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

<<<<<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

தென்கொரியாவின் **Yecheon**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் குழு பிரிவில் இந்தியா தங்கப்பதக்கத்தை வென்றது.

இப்பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் **Parneet Kaur, Aditi Swami** மற்றும் **Jyothi Surekha Vennam** குழு 232-க்கு 226 என்ற புள்ளிக்கணக்கில், துருக்கி குழுவை வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Priyansh – Jothi Surekha Vennam** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

<<<<<<<<>>>>

உலக இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Bedabrat Bharali** தங்கப் பதக்கம் வென்றார்.

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 73 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

<<<<<<<<>>>>

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Rinku** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜப்பானின் **Kobe** –வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 5 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் ஆறாவது இடத்தில் உள்ளது.

<<<<<<<<>>>>

ஸ்லோவேக்கியாவில் நடைபெற்று வரும் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஆடவர் **Triple Jump** பிரிவில் **Praveen Chithravel** வெள்ளிப் பதக்கத்தையும், ஆடவர் உயரம் தாண்டுதலில் **Tejaswin Shankar** வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

<<<<<<<<>>>>

பிரேசிலில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar – Manush Shah** இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<<>>>>

ஆஸ்திரிய ஓபன் பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் **Subhankar Dey** ஆடவர் ஒற்றையர் பிரிவிலும், **Tanishq Mamilla Palli** மகளிர் ஒற்றையர் பிரிவிலும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<<<>>>>

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

பெல்ஜியத்தில் நடைபெறவுள்ள மகளிர் பிரிவு போட்டி இந்திய நேரப்படி மாலை ஐந்து 30-க்கும், ஆடவர் பிரிவு போட்டி இரவு மணி 7.45-க்கும் தொடங்குகிறது.

---

<<<<<<<<>>>>

---